DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

| | |
|---|---|
| Case No. | ..O.S. No. 47/2021 |
| Deposition of witness for | ...P.W.1 |
| Name | மகாலிங்க மகேஷ் |
| Father's /Husband Name | ... |
| Village | ... |
| Taluk | ... |
| Caste | ... |
| Calling | ... |
| Religion | ... |
| Age | ... |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.03.2022

முதல் விசாரணை

நான் வழக்கில் வாதியாவேன். பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும், அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் நான் அறிந்தவகையில் உண்மையானவை. 22.09.1950 தேதியிட்டு என் முன் உரிமையாளர் ரெங்கசாமி நாயக்கர் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ–1, அவரிடமிருந்து, நான் 25.09.1978 ல் வழக்கு சொத்தை கிரையம் பெற்றதற்கான பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் அசல் வா.சா.ஆ–2, நான் வாங்கிய பிளாட் குறித்து ரெங்கசாமி நாயக்கர் தயார் செய்த வரைபடத்தின் புகைப்பட நகல் ஆவணம், பிளாட் வாங்கியபோது ரெங்கசாமி நாயக்கர் என்னிடம் கொடுத்ததை தாக்கல் செய்கிறேன் அது வா.சா.ஆ–3, (மேற்படி வரைபடமானது அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் அல்ல, எவ்விதமான கையொப்பமும் காணப்படவில்லை என்பதால் பிரதிவாதிதரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. எனவே ஆட்சேபனையின்பேரில் குறியீடு செய்யப்படுகிறது), நான் கிரையம் வாங்கிய பின்னர் அந்த சொத்திற்கு 19.06.1981 ல் என் பெயரில் பெற்ற பட்டா பாஸ்புஸ்தகம் அசல் .வா.சா.ஆ–4, 2000 ஆம் ஆண்டில் என் பெயரில் வருவாய்துறை வழங்கியுள்ள பட்டா பாஸ்புத்தகம் அசல் வா.சா.ஆ–5, நான்

கிரையம் வாங்கிய பின்னர், கிரையம் பெற்ற சொத்தை தனியாக உட்பிரிவு செய்துள்ளேன். உட்பிரிவு செய்தது தொடர்பாக புல வரைபடம் புகைப்பட நகல் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.ஆ–6 (புல வரைபடம் யாரால் சப்டிவிஷன் செய்யப்பட்டது என்ற விபரம் துலங்கவில்லை என்பதால் பிரதிவாதிதரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. எனவே ஆட்சேபனையின்பேரில் குறியீடு செய்யப்படுகிறது), என்பெயரில் உள்ள கம்ப்யூட்டர் பட்டா கணினி வழியாக பதிவிறக்கம் செய்யப்பட்டது வா.சா.ஆ–7, என் வழக்கு சொத்திற்கு நான் செலுத்திய தீர்வை ரசீதுகள் கிரையம் வாங்கிய காலம் முதல் தற்போது வரையிலானது (18 எண்ணம்) வா.சா.ஆ–8 வரிசை, பிரதிவாதி துளசியம்மாள், தூத்துக்குடி சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண். 114/2008 ல் தீர்ப்பு வாங்கி, அந்த தீர்ப்பினை பதிவு செய்துள்ளார். அதற்கான பதிவு செய்த தீர்ப்பின் சார்பதிவாளர் நகல் ஆவணம் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.ஆ–9, நான், வழக்கு தபசில் சொத்தைக்காட்டக்கூடிய புகைப்படங்களை நான் எடுத்துள்ளேன். அவைகள் 3 புகைப்படங்கள், சிடியுடன் கூடியதை தாக்கல் செய்கிறேன் அது வா.சா.ஆ–10. தூத்துக்குடி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பிரதிவாதி தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.287/2003 ல் தீர்ப்புரை பெற்றுள்ளார். அதன் தீர்ப்புரை சான்றிட்ட நகல் வா.சா.ஆ–11, தீர்ப்பாணை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.12, பிரதிவாதி துளசியம்மாள், தூத்துக்குடி சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண். 114/2008 ல் தீர்ப்பு பெற்றுள்ளார். அதன் தீர்ப்புரை சான்றிட்ட நகல் வா.சா.ஆ–13, தீர்ப்பாணை சான்றிட்ட நகல் வா.சா.ஆ–14. பிராதுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

<u>குறுக்குவிசாரணை வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.</u>